# பாடம் 33: நற்கருணை

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**
அடிப்படை நிலை (8 வயது) : 1 முதல் 6 கருத்துகளைக் கற்பிக்கவும்
இடைப்பட்ட நிலை (11 வயது) : 1 முதல் 8 கருத்துகளைக் கற்பிக்கவும்
மேம்பட்ட நிலை (14 வயது) : 1 முதல் 10 கருத்துகளைக் கற்பிக்கவும்

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
கடந்த சில பாடங்களில், அருளடையாளங்கள் குறித்து நாம் கற்று வருகிறோம். கிறிஸ்துவின் உடலுக்குள் முழுமையாக நுழைய ஒவ்வொரு நம்பிக்கையாளரும் பெற வேண்டிய இரண்டு முக்கிய அருளடையாளங்களை இதுவரை கண்டுள்ளோம். இந்த பாடத்தில், ஒரு கிறிஸ்தவர் அடிக்கடி பெற வேண்டிய மற்றொரு முக்கியமான அருளடையாளம் குறித்து நாம் கற்போம்: நற்கருணை.

**தற்போதைய பாடம்:**
1. கத்தோலிக்கத் திருச்சபை கடவுளை வழிபடும் பொழுது (லத்தீன் ரீதி கத்தோலிக்கர் இதை திருப்பலி என்று அழைக்கின்றனர்), கடவுளின் வார்த்தையைக் கேட்டு, கிறிஸ்துவின் உடல் மற்றும் குருதியால் ஊட்டம் பெறுகிறோம். நாம் பெறுகின்றவை அப்பமும் திராட்சை ரசமும் போன்று காணப்பட்டாலும், அப்பம் மற்றும் திராட்சை ரசத்தின் மீது குரு வசீகர செபத்தைச் செபிக்கும் பொழுது உண்மையில் கிறிஸ்துவின் உடலாகவும் குருதியாகவும் மாறிவிடுகிறது.

2. நற்கருணை என்பது வெறுமனே இயேசுவின் குறியீடு அல்லது அடையாளம் அன்று. நற்கருணை இனவிகள் வழியாக இயேசுவையே நாம் உட்கொள்கிறோம். குரு, தமது திருநிலைப்பாட்டின் ஆற்றலாலும், தூய ஆவியாரின் செயலாலும், அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் இயேசுவின் உடலாகவும் குருதியாகவும் மாற்றுகிறார். அப்பம் மற்றும் திராட்சை ரசத்தில் இருந்து இயேசு கிறிஸ்துவின் உடலும் குருதியுமாக மாறுகின்ற இந்த செயல்மை ‘‘பொருள்மறுவல்’’ (பொருள்மத்தின் மாற்றம்) என்று அழைக்கப்படுகிறது.

3. வசீகரிக்கப்பட்ட அப்பம் மற்றும் திராட்சை ரசத்தின் இனவிகளில், கிறிஸ்து தாமே, உயிரோடும் மாட்சியோடும், உண்மையிலும் மெய்யாகவும், பொருள்ம வகையிலும் நிகழ்மைப் பட்டுள்ளார்: அவரது உடலும் குருதியும், அவரது ஆன்மாவோடும் இறைத்தன்மையோடும் (கதிம 1413).

4. மற்ற எல்லா அருளடையாளங்களையும் போன்று, நற்கருணையும் இயேசுவாலே நிறுவப்பட்டது. இயேசு நற்கருணையை நிறுவியது புனித மறைநூலில் விவரிக்கப்பட்டுள்ளது (மத் 26:26-28; மாற் 14:22-24; லூக் 22:17-20).

5. மேல்மாடி அறையில் நற்கருணையை நிறுவுவதற்கும் முன்பே, அவர் கப்பர்நாகுமில் இருந்த பொழுதே, தமது உடலிலும் குருதியிலும் பங்குகொள்வதன் அவசியம் குறித்து இயேசு ஏற்கெனவே பேசியுள்ளார் (யோவா 6:51-55).

6. முதல் திருவிருந்து பெற்ற எல்லா கத்தோலிக்கர்களும், அவர்கள் சாவானப் பாவத்தில் இருந்தாலொழிய, திருப்பலியில் நற்கருணை பெறுவதற்கு வரவேற்கப்படுகின்றனர் என்று கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி கற்பிக்கிறது. நற்கருணை விருந்தில் கிறிஸ்துவைப் பெற விரும்புகிற எவரும் அருள் நிலையில் இருக்க வேண்டும். சாவானப் பாவத்தோடு இருக்கிறதாக அறிந்துள்ள எவரும், ஒப்புரவு அருளடையாளத்தில் மன்னிப்பு பெறாமல் நற்கருணை பெறக்கூடாது (கதிம 1415). திருப்பலி கொண்டாட்டத்தில் பங்கேற்கும் பொழுது, விசுவாசிகள் தூய நற்கருணை பெறுமாறு திருச்சபை மிதமாகப் பரிந்துரைக்கிறது. வழக்கமாகத் தூய நற்கருணை பெறாதவர்கள், ஆண்டுக்கு ஒரு முறையாவது பெறுவது கட்டாயம் (கதிம 1417).

7. நற்கருணை பெறுவதன் விளைவுகள்:

அ) *அது கிறிஸ்துவுடனான நமது ஒன்றிப்பை ஆழப்படுத்துகிறது* (கதிம 1391). தமது உடலை உண்டு, தமது குருதியைப் பருகும் யாவரும் தம்மிலும், தாம் அவர்களிலும் இருப்பதாக இயேசு ஏற்கெனவே வாக்களித்துள்ளார் (யோவா 6:56). கடவுளின் மக்கள் நற்கருணையைப்

பெறும் பொழுது, அது குழுமத்தில் ஒற்றுமையைக் கொணர்ந்து, கிறிஸ்துவின் உடல் வலுப்பெறச் செய்கிறது.

ஆ) *அது நமக்கு ஆன்மிக ஊட்டமளிக்கிறது* (கதிம 1392). அது "திருமுழுக்கில் நாம் பெற்ற அருள் வாழ்வை பாதுகாத்து, அதிகரித்து, புதுப்பிக்கிறது".

இ) *அது நம்மைப் பாவத்தில் இருந்து விலக்குகிறது* (கதிம 1393-95). அது நம்மை கடந்தகாலப் பாவங்களில் இருந்து தூய்மைப்படுத்தி, எதிர்காலப் பாவங்களில் இருந்து பாதுகாக்கிறது. தம்மை நமக்கு உணவாகத் தருவதால், கிறிஸ்து நமது அன்புக்குப் புத்தெழுச்சியூட்டி, நமது ஒழுங்கற்றத் தொடர்புகளை முறிக்கச் செய்து, அவரில் நம்மை வேரூன்றச் செய்கிறார். நற்கருணை பெறுவதன் வழியாக கிறிஸ்துவின் வாழ்வை நாம் அதிகம் பகிர்கிறோம், நாம் எதிர்காலத்தில் சாவானப் பாவங்களைச் செய்வதில் இருந்து அது நம்மைப் பாதுகாக்கிறது.

ஈ) *அது நம்மைத் திருச்சபையோடு ஒன்றிணைக்கிறது* (கதிம 1396). நற்கருணை வழியாக, தமது உடலையும் குருதியையும் பெற்ற எல்லா விசுவாசிகளையும், திருச்சபை என்ற ஒரே உடலில் கிறிஸ்து ஒன்றிணைக்கிறார். "திருமுழுக்கால் ஏற்கெனவே எட்டப்பெற்ற, திருச்சபைக்குள்ளான இந்த ஒருங்கிணைப்பைத் திருவிருந்து புதுப்பித்து, வலுப்படுத்தி, ஆழப்படுத்துகிறது."

உ) *அது ஏழைகளுக்கான நமது கடமையை நமக்கு நினைவூட்டுகிறது* (கதிம 1397). கிறிஸ்து நமக்காக வழங்கிய உடலையும் குருதியையும் பெறுவதில், நம்மிடையே உள்ள ஏழைகளிலும் அவரது நிகழ்மையை உய்த்துணர வேண்டும்.

8. திருச்சபையின் வாழ்வில், நற்கருணையில் தமது நிகழ்மையை மிகவும் அறியப்படத் தக்க முறையில் இயேசு பல நேரங்களில் வெளிப்படுத்தியுள்ளார். உண்மையில், வசீகரிக்கப்பட்ட ஓம்பியில், அப்பம் மற்றும் திராட்சை ரசத்தின் தோற்றத்திலேயே, நம் ஆண்டவரின் உடல், குருதி, ஆன்மா, மற்றும் இறைத்தன்மை இருக்கிறதை கத்தோலிக்கத் திருச்சபை ஏற்கெனவே நம்புகிறது. ஓம்பியானது "மனிதத் தசையாகவும் குருதியாகவும் மாறிய" நிகழ்வுகள் அடங்கிய நற்கருணை அற்புதங்கள் நடைபெற்றத் தருணங்கள் இருக்கின்றன. இவற்றில் பல நற்கருணை அற்புதங்கள் உண்மையில் வலுவற்ற விசுவாசத்தால் நிகழ்ந்தவை என்பது சுவையானது. எடுத்துக்காட்டாக, நற்கருணையில் இயேசுவின் மெய் நிகழ்மையை சிலர் ஐயமுற்றதன் விளைவாக பல நற்கருணை அற்புதங்கள் நடைபெற்றன.

நற்கருணை அற்புதங்களின் (மற்ற பலவற்றின் நடுவே) சில புகழ்பெற்ற எடுத்துக்காட்டுகள்:

அ) *லான்சியானோ, இத்தாலி (8ஆம் நூற்றாண்டு)*: குரு ஒருவர் மெய் நிகழ்மையை நம்புவதில் இடர்பாடு கொண்டிருந்தார்; எவ்வாறெனினும், அவர் அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் வசீகரம் செய்தபோது, அவை தசையாகவும் குருதியாகவும் மாறின. இந்த அற்புதம் பரந்த அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டும், அற்புதம் என்று மட்டுமே விளக்கப்பட்டுள்ளது. தமனிகள், சிரைகள், மற்றும் நரம்பிழைகளைக் கொண்ட இதயத் திசுக்கள் இந்த தசையில் இருக்கின்றன. இதிலும், அங்கீகாரம் பெற்ற எல்லா நற்கருணை அற்புதங்களிலும் காணப்படும் குருதி வகையாக உள்ளது ஏபி!

ஆ) *பொல்சேனா-ஓர்வியத்தோ, இத்தாலி (1263)*: மெய் நிகழ்மையை நம்புவதில் இடர்பாடு கொண்டிருந்த ஒரு குருவுக்கு, வசீகர செபத்தின்போது அப்பத்தில் இருந்து குருதி கசியத் தொடங்கியது. இந்த அற்புதத்தின் காரணமாக, திருத்தந்தை 4ம் உர்பான் கிறிஸ்துவின் திருவுடல் விழாவை நிறுவினார், அது இன்று வரையிலும் கொண்டாடப்படுகிறது.

இ) *ப்ளனூ, பிரான்ஸ் (1331)*: ஒரு பெண்மணியின் வாயிலிருந்த நற்கருணை, பலிபீடத் தளர்துணியில் தவறி விழுந்தது. குரு அந்த அப்பத்தை எடுக்க முயற்சித்தார், ஆனால் அந்த அப்பத்தின் அளவிலான பெரும் குருதிக் கறையாக அது மாறிவிட்டது.

ஈ) *ஆம்ஸ்டர்டாம், ஹாலந்து (1345)*: நெருப்பில் வீசப்பட்ட நற்கருணை இரவு முழுவதும் அதிலிருந்தும் அற்புதமாக எரிந்து போகாதிருந்தது.

உ) *சியன்னா, இத்தாலி (1730)*: வசீகர அப்பங்கள் 250 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து நேர்த்தியாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன, கடுமையான அறிவியல் ஆய்வுகளும் இந்த நிகழ்வை விளக்க இயலவில்லை.

9. 'பொருள்மறுவல்' என்பது, அப்பமும் திராட்சை ரசமும் எவ்வாறு கிறிஸ்துவின் உடலாகவும் குருதியுமாக மாறுகிறது என்பதை விளக்க புனித தாமஸ் அக்குவினாஸ் 13ஆம் நூற்றாண்டில் பயன்படுத்தியக் கொள்கை ஆகும். முற்கால கிரேக்க மெய்யியலார் அரிஸ்டாட்டிலிடம் இருந்து இந்த கருத்துருவை அக்குவினாஸ் கடன் வாங்கியுள்ளார். இது திரெந்து சங்கத்தில் (1545-63) திருச்சபையின் அதிகாரப்பூர்வப் படிப்பினையாக ஆனது (கதிம 1376).

உலகில் இருக்கின்ற அனைத்தும் இரண்டு மட்டங்களில் உள்ளன என்று முற்கால மெய்யிலார்கள் கற்பித்தனர். நமது முடி, தோல், உடல் போன்றவை, ஒரு பொருளின் இயற்சார் மற்றும் புலப்படும் ''நேர்விகளாக'' இருக்கின்றன. ''பொருள்மம்'' என்பது, நீங்கள் ஒரு மனிதர் என்ற உண்மையைப் போன்று, ஒரு பொருளின் புலப்படாத தரநிலையாக இருக்கிறது. நற்கருணையில், நேர்விகளுக்குப் பதிலாக பொருள்மம் மாறுகிறது. ஆகவே, அப்பம் மற்றும் திராட்சை ரசத்தின் பொருள்மம் கிறிஸ்துவின் உடலாகவும் குருதியாகவும் மாறுகிறது, ஆனால் நேர்விகள் கோதுமை மாவாகவும் திராட்சை ரசமாகவுமே இருக்கின்றன. நேர்விகளும் மனிதத் தசை அல்லது மனிதக் குருதி போன்ற புலப்படும் தரநிலைகளாக மாறுகிற சமயத்தில், அது நற்கருணை அற்புதம் ஆகிறது.

நற்கருணை அற்புதங்கள் நடைபெறும் சமயத்தில், அவற்றை உட்கொள்ள முடியாது, மாறாக ஆராதனைக்காக (வழிபாட்டுக்காக) அவற்றைப் பாதுகாக்க வேண்டும். நேர்விகளும் மனிதத் தசையாகவும் குருதியாகவும் மாறிவிடுவதால், அற்புதம் நடைபெற்ற நற்கருணையை உட்கொள்வது மனிதக்கறி உண்பதற்கு ஒப்பானதாக இருக்கும்.

10. யோவான் 6:51-66ஐ வாசிக்கவும். கப்பர்நாகும் தொழுகைக்கூடத்தில் தமது உடலை உண்டு, தமது குருதியைக் பருகுவதன் முக்கியத்துவம் குறித்து இயேசு பேசியத் தருணமாக இது இருந்தது. அவரது பேச்சைக் கேட்டவர்களில் ஏறக்குறைய எல்லாருமே, மனிதக்கறி உண்பது குறித்து அவர் பேசியதாக எண்ணித் தவறாகப் புரிந்துகொண்டனர். தமது உடலை உண்டு, தமது குருதியைக் பருகுவதன் அவசியம் குறித்து இயேசு எதைக் கூறினாரோ, அது அதன் பொருளாக இருந்திருக்கவில்லை என்றால், தமது சீடர்கள் வெளியே சென்றதை அவர் தடுத்திருப்பார் (ஏனெனில் அவர் கூறியதாக அவர் நினைத்துக் கொண்டவற்றால் அவர்கள் புண்பட்டனர்). அவர் கூறியதே அதன் பொருளாக இருந்ததால், அவர்கள் தம்மை விட்டுச் செல்வதை அவர் தடுக்கவில்லை: ''எனது உடலை உண்டு, எனது குருதியைப் பருகும் எவரும் நித்திய வாழ்வைக் கொண்டுள்ளார், மேலும் இறுதி நாளில் நான் அவரை (உயிரோடு) எழுப்புவேன்.''